# ஐசுவரியவானும் லாசருவும்

1. இந்த உவமை லூக்16:19-31இல் இயேசு கிறிஸ்துவால் சொல்லப்பட்டதாக இருக்கிறது. அநேகர் இதனை உவமை என்று அழைத்தாலுங்கூட இது உண்மையில் நடந்த சம்பவம் என்று நினைக்கிறார்கள். அவ்விதம் கருதி இதிலிருந்து சொல்லர்த்த (**Literal**) அர்த்தத்தை எடுத்துக்கொண்டு, மனிதன் மரித்தபின் அறிவோடு, ஞானத்தோடு, உணர்வோடு, பாசத்தோடு, செய்கையோடு இருக்கிறான் என்று தங்கள் நிதானிப்பை பயன்படுத்தி கூறுகிறார்கள். இவர்கள் தேவனுடைய வசனத்தின் போதனையை கவனித்து செவிசாய்க்கத் தவறிவிடுகிறார்கள். வேதம் கூறுவதைக் கவனிப்போம்: "நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே" (பிரசங்கி 9:10). "அவர்கள் சிநேகமும் அவர்கள் பகையும் அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்து போயிற்று" (பிரசங்கி 9:6) "அவனுடைய ஆவி பிரியும். அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான். அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம் (சங் 146:4; யோபு 14:21; சங் 115:17; ஏசா 63:16; ஆதி 3:19) அவ்விதம் வேதாகமத்துக்கு முரண்பாடாக அவர்கள் இந்த உவமையை அர்த்தப்படுத்துவதுதான் அவர்களோடு பிரச்சனையாயிருக்கிறது.

2. இது நடந்த சம்பவமாயிராது, ஒரு உவமையாய் மாத்திரம் இருக்கிறது என்பதை நாம் முதலில் கவனத்துக்குக் கொண்டு வருவோமாக. இதனை சொல்லர்த்தமாய் அர்த்தப்படுத்துவோமானால் அநேக விபரீத அர்த்தங்களை இது கொடுக்கிறது. உதாரணமாக ஐசுவரியவான், தன் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தவிர ஒன்றையும் லாசருவுக்கு கொடுக்காது, அநேக ஆசீர்வாதங்களை அனுபவித்ததால் நகரத்துக்குச் சென்றான் என்று சொல்லர்த்தம் தெரிவிக்கிறது. ஆனால் அதில் அவனது தீமையான குணத்தைப்பற்றி ஒரு வார்த்தையும் சொல்லப்படவில்லை. லாசருவை எடுத்துக்கொண்டால், அவன் தேவனுடைய உண்மையான பிள்ளையாக விசுவாசத்திலும், நம்பிக்கையிலும் நிறைந்தவனாய் இருந்ததினால் ஆசீர்வதிக்கப்பட்டான் என்று வேதாகமம் கூறவில்லை. அவன் பிச்சைகாரனாய் வியாதியுள்ளவனாய் இருந்ததால் ஆபிரகாம் மடிக்குக் கொண்டுபோகப்பட்டான் என்று கூறப்பட்டிருக்கிறது.

3. இதை சொல்லர்த்த அர்த்தமாய் அர்த்தப்படுத்துவோமானால் இதிலிருந்து நாம் பெறக்கூடிய நியாயமான பாடம் என்ன? நீங்கள் ஒரு எளிய முழுவதும் புண்கள் நிறைந்த வியாதியுள்ள பிச்சைகாரனாயிருக்காவிடில் மறுமையின் ஆசீவாதத்திற்குள் பிரவேசிக்கமாட்டிர்கள் என்றும், இப்பொழுது அருமையான ஆடையை அணிந்துகொண்டு ஒவ்வொரு நாளும் சம்பூரணமாய் சாப்பிட்டு வருவீர்களாகில் நீங்கள் நிச்சயமாய் நரகத்துக்குப் போவீர்கள் என்பதுமான பாடத்தைத்தான் சொல்லர்த்த விளக்கம் போதிக்கிறது.

4. மேலும் இந்த முழு விளக்கத்தையும் சொல்லர்த்தமாய் எடுத்தால், ஆபிரகாம் மடி எத்தனை பேரை கொள்ளமுடியும்? ஆபிரகாம் மடிதான் மறுமையின் ஆசீர்வாதமாயிருக்குமாயின், உலகத்திலுள்ள ஆயிரமாயிரம் வியாதியுள்ள பிச்சைகாரர் அத்தனைபேரையும் எவ்விதம் ஆபிரகாம் மடி கொள்ளக்கூடும். நாம் ஏன் இவ்விதம் விபரீத அபத்தமானவைகளை பொருள்படுத்தும் சொல்லர்த்தத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்?.

5. ஓரஞ்சாயாத, நியாயமான மனங்களையுடையவர்கள், இதனை உவமை என்று அறிந்திருக்கிறார்கள். ஒரு உவமையை எவ்விதம் பொருள் கொள்ளல் வேண்டும்? உவமையாக

சொல்லப்படுபவை ஒரு காரியம், ஆனால் அது அர்த்தப்படுத்துபவை மற்றொரு காரியமாகும். உவமையின் ஒவ்வொரு அம்சமும் சொல் அர்த்தத்தை அப்படியே கொடுக்காமல், ஒரு ஞான அர்த்தத்தைக் கொடுக்கிறது. அதனை இயேசு கிறிஸ்து சில உவமைகளை விளக்கியதிலிருந்து நாம் புரிந்துகொள்ளுகிறோம். உதாரணமாக மத்தேயு 13இல் சொல்லப்பட்டிருக்கும் கோதுமையையும் களைகளையும் பற்றிய உவமையை எடுத்துக்கொள்வோம். அவர், கோதுமையை தேவனுடைய இராஜ்ஜியத்தின் புத்திரராக அர்த்தப்படுத்தினார்; களைகளை சாத்தானுடைய புத்திரராக அர்த்தப்படுத்தினார். அவர் அறுவடை செய்கிறவர்கள் என்று கூறும்போது அவர் தேவ தூதர்களை அர்த்தப்படுத்தினார் என்று கருதுகிறோம். அவ்விதம் நமது கர்த்தர் விளக்கின ஒவ்வொரு உவமையிலும் சொல்லப்பட்டக்காரியம் அது அர்த்தப்படுத்தினதை நேரடியாக சொல்லர்த்தமாய் சொல்லவில்லை.

6. மத் 13:10,11 யும் மாற் 4:10,11 வசனங்கள் இணைத்து வாசித்துப்பார்த்தால் உவமைகள் ஏன் உபயோகிக்கப்பட்டன என்று புரிந்துகொள்ளலாம். தேவனுடைய இரகசியங்களை தேவனுடைய ஜனம் மட்டும் புரிந்துகொள்ளவும், புறம்பே இருக்கிறவர்களுக்கு அது புரியாததாயும் மறைபொருளாய் இருக்கவும் உவமை பயன்படுத்தப்பட்டது என்று நாம் அறிகிறோம். அதன்படி இந்த ஐசுவரியவான் லாசரு உவமையில் சொல்லப்பட்டிருப்பது நேரடியான சொல்லர்த்த செய்தியல்ல. அது அதன் ஞான அர்த்தத்தில் வேறு ஒரு காரியத்தை பொருள் கொள்ளுகிறது. அதன் ஞான அர்த்தம் என்ன என்று நாம் இங்கு தேவ ஒத்தாசையுடன் கவனிப்போம். நமது கர்த்தர் தெளிவாக்கிக் கொடுக்காத இந்த கருத்தை அடக்கமாய் தாழ்மையாய் கொடுப்பது அவசியம். ஆதலால் எங்களது கருத்தை வாசகர் மேல் திணிக்க நாங்கள் விரும்பவில்லை. தேவனுடைய வார்த்தைகளுக்கும் திட்டங்களுக்கும் இசைந்த விதமாய் அவரது சத்தியம் பிரகாசிக்கப்பட்ட நிதானித்தறிதல் வாசகர்களை எவ்வளவுக்கு தகுதியுடையதாக்குகிறதோ அவ்வளவுக்கு எங்கள் விளக்கத்தைக் கொடுக்கிறோம்.

7. லாசரு குறிப்பிட்ட ஒரு வகுப்பாரையும் அவர்கள் நிலையையும் விளக்குகிறான். அதைப்போல ஐசுவரியவான், ஒரு வகுப்பாரையும் அவர்கள் நிலையையும் விளக்குகிறான். எங்களுக்கு புரிந்தமட்டில் அந்த ஐசுவரியவான் யூத தேசத்தை அடையாளப்படுத்துகிறான். அந்த உவமையைச் சொன்ன அந்த காலக்கட்டத்திலும் அதற்கு முன் நீண்டகாலமாகவும், அவர்கள் தேவனுடைய தயவை விசேஷமாக பெறுகிறவர்களாக தினமும் சம்பூரணமாயிருந்தார்கள்.

8. பரி.பவுல் கூறுகிறபடி "யூதனுடைய மேன்மை என்ன? ... ... அது எவ்விதத்திலும் மிகுதியாயிருக்கிறது. தேவனுடைய வாக்கியங்கள் (நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களும்) அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது விசேஷித்த மேன்மையாமே." (ரோம 3:1,2). ஆபிரகாமுக்கும் தாவீதுக்கும் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் ராஜரீகத்தை (Royalty) இஸ்ரவேல் ஜனத்துக்கு முதலீடு செய்திருக்கின்றன. அவர்களுக்குரிய ராஜரீகத்தை (ராஜாக்கள் அணியும்) ஐசுவரியவான் அணிந்திருந்த இரத்தாம்பரம் (Purple) அடையாளப்படுத்துகிறது. இஸ்ரவேல் ஜனம் செய்து வந்த நியாயப்பிரமாணத்தின் பலிகள் அவர்களை அடையாள ரீதியில் பரிசுத்த ஜாதியாக காண்பித்தது. அதை, ஐசுவரியவான் அணிந்திருந்த விலையேறப்பெற்ற வஸ்திரம் (ஆங்கிலத்தில் - Fine Linen – ஆசரிப்புக் கூடாரத்தின் விளக்கங்களில் இதற்கு மெல்லிய பஞ்சு நூலானா - யாத் 26:1 - என்று கூறப்பட்டிருக்கிறது). அதாவது மெல்லிய பஞ்சு நூலான (வெண்மையான) வஸ்திரம் அடையாளப்படுத்துகிறது. (வெளி 19:8).

9. லாசரு புறஜாதியாரை அடையாளப்படுத்துகிறான். அதாவது இஸ்ரவேலர் அல்லாத அனைத்து உலகத்தையும் லாசரு அடையாளப்படுத்துகிறான். இந்த உவமையை இயேசு கிறிஸ்து சொன்ன காலக்கட்டத்தில் புறஜாதியார், இஸ்ரவேல் ஜனங்கள் சம்பூரணமாய் அனுபவித்த அந்த ஆசீர்வாதங்களை அற்றவர்களாய், புறக்கணிக்கப் பட்டவர்களாய் அதன் தேவைக்காக அலைந்தவர்கலாய் இருந்தனர். அவ்விதம் அவர்கள், அந்த ஐசுவரியவான் வாசலில் இருந்தனர். எந்தவொரு உன்னத ராஜரீக ஆசீர்வாதங்களும் அவர்களுக்கு இல்லை. அடையாள ரீதியில் கூட அவர்கள் சுத்திகரிக்கப்படாதவர்களாய் இருந்தனர். அவர்கள் சன்மார்க்க ரீதியில் வியாதியுள்ளவர்கள், களங்கப்பட்டவர்கள் பாவமுடையவர்கள் என்ற நிலையில் நாய்களின் தோழர்களாய் இருந்தனர். அக்காலங்களில் நாய் ஒரு அருவருக்கப்படக்கூடிய பிராணியாகக் கருதப்பட்டது. அடையாளமாய் சுத்திகரிக்கப்பட்ட யூதன், மற்றவர்களை 'தேவனற்றவன்' என்றும், நாய்கள் என்றும் அழைத்தான். அவர்களோடு யூதன் சாப்பிடுவதுமில்லை, விவாகம் பண்ணுவதுமில்லை, எந்தவொரு இடைபடுதலும் செய்வதில்லை (யோவா 4:9).

10. ஐசுவரியவானுடைய மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளால் லாசரு தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான் என்பது, இஸ்ரவேல் ஜனத்துக்குக் கிடைக்கும் தேவதயவின் துணிக்கைகளாவது தங்களுக்குக் கிடைக்காதா என்று புற ஜாதியார் ஏங்கிக்கொண்டிருந்த நிலையை விளக்குகிறது. இது இயேசு கிறிஸ்து கானானிய ஸ்திரீயிடம் பேசின விதத்திலிருந்து நமக்கு தெளிவாகிறது. "பிள்ளைகளின் (இஸ்ரவேலரின்) அப்பத்தை (தேவதயவை) நாய்க்குட்டிகளுக்கு (புற ஜாதியாருக்கு) போடுவது நல்லதல்ல என்றார். அதற்கு அவள் மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள் (மத் 15:26,27). இயேசு அவளுடைய மகளை குணமாக்கினார். அவ்விதம் அவள் விரும்பிய (தேவ) தயவின் துணிக்கையை அவளுக்குக் கொடுத்தார்.

11. 'ஐசுவரியவான் மரித்ததும்', லாசரு மரித்ததும்' அவர்கள் அடையாளப்படுத்தும் இஸ்ரவேலர், புற ஜாதியார் ஆகிய இரு வகுப்பாருடைய அக்கால நிலைகளில் முடிவு உண்டாக்கியதை விளக்குகிறது. ஐசுவரியவான் மரித்தான் இஸ்ரவேலருக்கு அடையாளமான நீதி இல்லாமல் போகும் காலம் வந்தது. அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த ராஜரீகம் அவர்களிடமிருந்து எடுபட்டு போயிற்று. அவர்களிடமிருந்து தேவனுடைய இராஜ்ஜியம் எடுக்கப்பட்டு அதற்கேற்ற கனி கொடுக்கிற ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டது (மத் 21:43) ஐசுவரியவான் (யூதஜனம்), இப்படிப்பட்ட சகல விசேஷித்த சிலாக்கியங்களுக்கு மரித்துப்போனான். அவன் (யூத ஜனம்) பாதாளத்தில் (கிஹென்னா அக்கினியில்) விடப்பட்டிருந்தான். அது, அவன் புறக்கணிக்கப்பட்டு உபத்திரவத்தில், வேதனையில், பாடுகளில் இருந்ததைக் காண்பிக்கிறது. அவ்விதமே அதிலிருந்து இன்றுவரை யூதஜனம் உபத்திரவப்பட்டிருக்கிறார்கள்.

12. லாசருவும் மரித்தான். புற ஜாதியாரின் நிலையும் மாறுதல் அடைந்தது. புற ஜாதியாரிலிருந்து அநேகர் தேவதூதுவர்களால் (தேவனுடைய தூதை கொடுக்கிறவர்களால், அப்போஸ்தலர்களால்) ஆபிரகாம் மடிக்குக் (பிள்ளைகளின் அந்தஸ்துக்கு) கொண்டு போகப்பட்டனர். ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பன் என்று அறியப்படுகிறான். விசுவாசத்தின் பிள்ளைகள் எல்லோரையும் தன் மடியில் ஏற்றுக் கொள்ளுகிறான். அவ்விதம் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அனைத்து வாக்குத்தத்தங்களுக்கும் சுதந்திரவாளிகளாக, புறஜாதி விசுவாசிகள் அங்கிகரிக்கப்பட்டனர்.

13. மாம்ச இஸ்ரவேலரின் கருத்துப்படி புற ஜாதியார் தேவனுடைய புத்திரர் அல்ல. ஆனால் புற ஜாதியார் வாக்குத்தத்தத்தின் தேவனுடைய புத்திரராய் ஆபிரகாம் வித்தாக கருதப்படுகிறார்கள். "அந்தச் சந்ததி (Seed – வித்து) கிறிஸ்துவே." நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியராயும் (Seed – வித்து), வாக்குத்தத்தத்தின் படியே சுதந்திரராயும் இருக்கிறீர்கள் (கலா 3:16,29) - ஆம், அப்பொழுது இருந்த நிலை இயேசுவின் மரணத்தில் முடிவடைந்தது.

14. அதிலிருந்து யூதர்கள் புறக்கணிக்கப்பட்டு அவர்களுக்கு ஒரு தயவும் காட்டப்படவில்லை. ஆனால் இந்த உலகத்தில் முன்னாள் இஸ்ரவேலரின் வாக்குத்தத்தங்களுக்கு (காணியாட்சிக்கு) அந்நியராயும் புறம்பேயிருந்தவர்களாயும், தேவனற்றவர்களாயும், எந்த நம்பிக்கையும் இல்லாதவர்களாயும் இருந்த இந்த இழிவாகக் கருதப்பட்ட (Poor) புற ஜாதியார், கிறிஸ்துவின் ரத்தத்தினால் சமீபமாக்கப்பட்டு தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டனர் (எபே 2:13). அன்று யூதேயாவில் யூதாவும் பென்யமீனும் ஆகிய இரு கோத்திரங்கள் ஐசுவரியவான் என்ற ஒரு நபரால் அடையாளப்படுத்தப்பட்டால், அவனது 5 சகோதரர்கள் - அதாவது மோசேயும் தீர்க்கதரிசிகளையும் தங்களுக்கு அறிவுறுத்தி நடத்துகிறவர்களாகக் கொண்ட 5 சகோதர்களும் - மீந்த 10 கோத்திரங்களை (5x2=10) அடையாளப்படுத்துகிறார்கள் என்று கருதுவது இசைவாக இருக்கிறது அல்லவா?

15. அவர்களைக் குறித்து எழுதப்பட்டக் காரியம். தேவனுடைய எல்லா விசேஷ தயவும் அந்த 10 கோத்திரங்களுக்கும் ஐசுவரியவான் அடையாளப்படுத்தும் 2 கோத்திரங்களுக்கும் முடிந்துவிட்டது என்பதை சந்தேகம் இல்லாமல் எடுத்துக்காட்டுவதற்காக வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் மோசேயும் தீர்க்கதரிசிகளும் அவர்களுக்கு உண்டு என்று கூறுவதில், இது மற்ற புற ஜாதியாரைக் குறிக்காது என்றும், இஸ்ரவேல் ஜனத்தை மட்டுமே குறித்து கூறப்பட்ட உவமை இது என்றும் மிகத் தெளிவாகிறது.

16. சுருக்கமாக சொல்லப்போனால் இந்த உவமை, பரி.பவுல் ரோமர் 11:19-31 இல் கூறுகிறதை ரத்தினச் சுருக்கமாக போதிக்கிறது. பரி.பவுல், சுபாவக் கிளைகளை விசுவாசமின்மையால் முறித்துவிட்டு, காட்டு ஒலிவ கிளைகளை ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களுக்குள் ஒட்டி வைக்கிறதாகக் கூறுகிறார். இந்த உவமையில் இயேசு கிறிஸ்து, இஸ்ரவேல் ஜனத்தை உபத்திரவத்துக்குள் விட்டுவிட்டதாகத் தெரிவிக்கிறார். ஆனால் இயேசு அவர்களை மறுபடியும் முடிவாக தேவ தயவுக்கு தூக்கியெடுக்கவிருப்பதைக் குறித்து இங்கு கூறவில்லை. ஏனெனில் சந்தேகமேயில்லாது அது அப்பொழுது அவர் போதித்துக் கொண்டிருந்த செய்திக்கு சம்பந்தப்பட்டது அல்ல.

17. பரி.பவுல் இஸ்ரவேல் ஜனம் திரும்பவும் தேவதயவுக்கு தூக்கியெடுக்கப்படுவதை தெளிவுபடுத்தி, நிச்சயப்படுத்துகிறார். புற ஜாதியாரின் நிறைவு (Fulness of Gentiles – ரோம 11:25 மணவாட்டி சபைக்கான இலக்கம் புற ஜாதியாரிலிருந்து நிறைவு அப் 15:14,16,17) பெற்றபின் அவர்களும் (இஸ்ரவேலர்களும்) ... ... உங்களுக்கு (மணவாட்டி சபைக்கு) கிடைத்த இரத்தத்தினாலே (Thro' your – the Chruch's – mercy – சரியான மொழியாக்கம் உங்களுடைய இரக்கத்தினாலே) இரக்கம் பெறுவார்கள். (ரோம 11:31). பரி.பவுல் இதனை மாம்ச இஸ்ரவேலருடன் பண்ணின தேவனுடைய உடன்படிக்கை என்று கூறுகிறார். அவர்கள் பரம அழைப்பை இழந்துபோனாலுங்க்கூட பூமிக்குரிய ஆசீர்வாதங்களுக்கு சுதந்திரவாளிகளாக பூமியில் பிரதான ஜனமாக இருப்பார்கள் என்று கூறுகிறார்.

18. இதற்கு நிரூபணமாக “மீட்கிறவர் சீயோனிலிருந்து (மகிமைப்படுத்தப்பட்ட மணவாட்டி சபையிலிருந்து) வந்து அவபக்தியை யாக்கோபை விட்டு (மாம்ச இஸ்ரவேலர்களிடமிருந்து) விலக்குவார்.” (ரோம 11:26). “சுவிசேஷத்தைக் குறித்து (பரம அழைப்பைக் குறித்து) அவர்கள் உங்கள் நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள். (புறக்கணிக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள்) தெரிந்து கொள்ளுதலைக் குறித்து அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்பு கூறப்பட்டவர்களாயிருக்கிறார்கள்.” (ரோம 11:28). “எல்லோர் மேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாக தேவன் எல்லோரையும் கீழ்ப்படியாமைக்குள்ளே அடைத்து போட்டார். ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது.” (ரோம 11:32,33).